## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 119/மா/2023**

**நாள் : 13.07.2023**

திரு. M. கணேசன்,
இருக்கன்குடி, தூத்துக்குடி மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி
தூத்துக்குடி. – எதிர்மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், இருக்கன்குடி, மேற்கு தெரு, அன்னை இல்லம், 1/63–A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.கணேசன் என்பவரின் 17.04.2023 நாளிட்ட மனு 26.04.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 119/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி மாவட்டம், இருக்கன்குடி, மேற்கு தெரு, அன்னை இல்லம், 1/63–A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.கணேசன் என்பவர் தனது 17.04.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" அரசு நிலத்தில் ஆக்கிரமிப்பாளர்கள் கட்டிய சுமார் 75 வீடுகளுக்கு தூத்துக்குடி மாநகராட்சி அதிகாரிகள் சட்டவிரோதமாக வீட்டு வரி வசூல் செய்து வருவதுடன், அவர்களுக்கு தண்ணீர் கொண்டு செல்ல 296 மீட்டர் தூரத்துக்கு மிக பெரிய பைப்லைன் அமைத்து அரசு பணத்தை வீணடித்துள்ளனர். இதுகுறித்து 09.03.2023ல் புகார் கொடுக்கப்பட்டதற்கு நாளது தேதிவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

மேலும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அரசு நிலம், தூத்துக்குடி வட்டாட்சியர் அலுவலக மேல்முறையீட்டு அலுவலரின் தகவல்படி வருவாய்துறையால் பட்டா ஏதும் வழங்கப்படாத மாப்பிள்ளையூரணி கிராமம் புல எண்.183/3 விஸ்தீரணம் 1.98.5 ஏர்ஸ் மேற்படி புல எண் கிராம கணக்குகளின்படி சர்க்கார் புஞ்சை தரிசு எனவும் தடையாணைப் பதிவேட்டிலும் உள்ளது. மேலும் அந்த அரசு நிலம் கடற்கரை ஓரத்தில் Coastal Regulation Zone அமைந்துள்ளது. தூத்துக்குடி மாநகராட்சி பொது தகவல் அலுவலர் தகவலின்படி 78 வரிவிதிப்பு எண்கள் பதிவு

செய்யப்பட்டு வரி வசூல் செய்து வருவதுடன், அரசு நில ஆக்கிரமிப்பு வீடுகளுக்கு திரேஸ்புரத்தில் இருந்து 296 மீட்டர் பெரிய பைப் லைன் இணைப்பு கொண்டு செல்லப்பட்டுள்ளது என தகவல் பெறப்பட்டுள்ளது.

1)ஆக்கிரமிப்புகளை உடன் அகற்ற உத்தரவிட வேண்டும்.

2)ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவி செய்து சட்ட விரோதமாக நடந்து வரும் மாநகராட்சி அதிகாரிகள் மீது துறை ரீதியாக நடவடிக்கை வேண்டும்.

3)அரசு நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு திரேஸ்புரத்தில் இருந்து 296 மீட்டர் பெரிய பைப் லைன் இணைப்பு கொண்டு செல்லப்பட்டுள்ளது. ஆகவே அரசுக்கு ஏற்பட்டுள்ள செலவு தொகையை கணக்கிட்டு மாநகராட்சி ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி (வடக்கு மண்டலம்) முன்னாள் பொறுப்பு உதவி ஆணையர்/டவுன் பிளானிங் (AE) உதவி பொறியாளர் திருமதி. காந்திமதி ஆகியோர் மீது கீழ்க்கண்ட பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்து அவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டும்.

Serious negligence and dereliction of duty, resulting in considerable loss to Government "Tamilnadu Civil Services Discipline and Appeal Rules"

தூத்துக்குடி மாநகராட்சி, வார்டு 43, கதவிலக்கம் 10/3 பங்களாத் தெருவில் இருந்த பழைய வீடு கடந்த 2020ம் ஆண்டு முழுமையாக இடிக்கப்பட்டு புதிய வீடு சட்டவிரோதமாக மாநகராட்சி ரோட்டையும் ஆக்கிரமித்து கட்டப்பட்டது. அது தொடர்பாக தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் கேட்கப்பட்ட வினாவுக்கு " கட்டிட அனுமதி வழங்கப்படவில்லை எனவும் மனுதாரர் தெரிவித்துள்ள கட்டிடமானது தரைதளம் மற்றும் மேல்தளம் கிழக்கு பக்க சாலையில் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்படவில்லை" என மட்டும் தகவல் வழங்கினர். அதன் பிறகு தமிழக தகவல் ஆணைய நேரடி விசாரணையில் மேற்படி கட்டிடம் கட்டப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்களை காட்டி வாதிடப்பட்டது. அதன் பிறகு தகவல் ஆணையம் வழங்கிய உத்தரவுப்படி நாளது தேதி வரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமலும், முழுமையான தகவல்களை வழங்காமல் சட்டவிரோதமான கட்டிடத்தின் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் தூத்துக்குடி மாநகராட்சி(மேற்கு மண்டலம்) முன்னாள் பொறுப்பு உதவி ஆணையர்/டவுன் பிளானிங்(AE) உதவி பொறியாளர் திரு.ஆறுமுகம் அவர்கள் சட்ட விரோதமாக இருந்து வருகிறார். இதுகுறித்து 09.03.2023ல் புகார் கொடுக்கப்பட்டதற்கு நாளது தேதி வரை எந்த நடவடிக்கையும் இல்லை.

மேலும் கட்டிட அனுமதியில்லாமல் சட்ட விரோதமாக கட்டிய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துமாறும், மேற்படி கட்டிடத்தின் கிழக்கு, தெற்கு பக்க சாலை மற்றும் கட்டிடத்தில் முச்சந்தி வளைவு ஆக்கிரமிப்புக்களை உடன் அகற்ற உத்தரவிட வேண்டும் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி சட்ட திட்டங்களுக்கு விரோதமாக செயல்படும் முன்னாள் பொறுப்பு உதவி ஆணையர்/டவுன் பிளானிங் (AE) உதவி பொறியாளர் திரு.ஆறுமுகம் அவர்கள் மீது துறைரீதியாக தக்க நடவடிக்கை எடுப்பதுடன், கீழ்க்கண்ட பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்து அவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டும்.

Serious negligence and dereliction of duty. Resulting in considerable loss to Government " TamilNadu Civil Services Discipline and Appeal Rules"

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 11.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் தூத்துக்குடி மாநகராட்சியின் ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தனது 23.06.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" மனுதாரர் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள பகுதியானது மாப்பிள்ளையூரணி சர்வே எண்.183/3 மற்றும் அதனையொட்டியுள்ள நில அளவை செய்யப்படாத பகுதி (Un surveyed land) மன்னார்வளைகுடா கடற்கரை பகுதியில் அமைந்துள்ளது. தூத்துக்குடி மாநகராட்சியோடு இணைக்கப்படும் முன்னரே அப்பகுதியில் அமையப்பெற்றுள்ள 78 வீடுகளுக்கு தூத்துக்குடி ரூரல் பஞ்சாயத்து நிர்வாகம் மூலம் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக மாநகராட்சி மூலம் வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள ஊராட்சிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு நான்காவது குடிநீர் அபிவிருத்தித் திட்டம் நடைமுறையில் வந்த போது ஏற்கனவே வரிவிதிப்பு செய்யப்பட்ட பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய கடல் சார்ந்த தொழிலை மேற்கொண்டு வரும் ஏழை, எளிய குடியிருப்புதாரர்கள் குடிநீர் இணைப்பு வேண்டி முறையாக மனு செய்தனர். அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு மாநகராட்சி மூலம் குடிநீர் இணைப்பு வழங்கி குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

மாப்பிள்ளையூரணி சர்வே எண்.183/3 மாப்பிள்ளையூரணி ஊராட்சியை சார்ந்தது. மாநகராட்சி எல்லையையொட்டி நில அளவை செய்யப்படாத பகுதியிலுள்ள குடியிருப்புகளை ஆக்கிரமிப்பாக கருதி அப்புறப்படுத்த இயலாது. மேலும், தற்போது மேற்படி பகுதி வாழ் மக்களால் புதிய கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி ஏதும் செய்யப்படவில்லை. புதிய குடியிருப்புகளும் ஏற்படவில்லை என்ற விபரம் அறிக்கையாக சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 27.06.2023 அன்று** நாகர்கோவில் முகாமில் நடைபெறும் நேரடி **விசாரணைக்கு வருமாறு 22.06.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5) மனுதாரர் 27.06.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராக இயலாத சூழ்நிலையில் அவரது சார்பாக அவரது ஒப்புதலின்பேரில் திரு.கே.பாலசுப்ரமணியன் என்பவர் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:**

" தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள விவேகானந்தர் நகரில் அரசு நிலத்தில் சுமார் 75 வீடுகள் கடற்கரையோரத்தில் (coastal zone) அரசு நிலத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளன. திரேஸ்புரத்தில் இருந்து 296 மீட்டர் பெரிய பைப்லைன் இணைப்பு கொண்டு

செல்லப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு மாநகராட்சியால் குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், தூத்துக்குடி மாநகராட்சி பங்களா தெருவில் உள்ள வீடு ரோட்டை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளன. எனவே அரசு இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள வீடுகளின் மீது தேவையான நடவடிக்கை எடுத்து அங்குள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது 26.06.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6) தூத்துக்குடி மாநகராட்சியின் நிர்வாக அலுவலர் 27.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

" மனுதாரர் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள பகுதியானது மாப்பிள்ளையூரணி சர்வே எண்.183/3 மற்றும் அதனையொட்டியுள்ள நில அளவை செய்யப்படாத பகுதி (unsurveyed land) மன்னார்வளைகுடா கடற்கரை பகுதியில் அமைந்துள்ளது. தூத்துக்குடி மாநகராட்சியோடு இணைக்கப்படும் முன்னரே அப்பகுதியில் அமையப்பெற்றுள்ள 78 வீடுகளுக்கு தூத்துக்குடி ஊரல் பஞ்சாயத்து நிர்வாகம் மூலம் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக மாநகராட்சி மூலம் வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள ஊராட்சிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு நான்காவது குடிநீர் அபிவிருத்தித் திட்டம் நடைமுறையில் வந்த போது ஏற்கனவே, வரிவிதிப்பு செய்யப்பட்ட பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய கடல் சார்ந்த தொழிலை மேற்கொண்டு வரும் ஏழை, எளிய குடியிருப்புதாரர்கள் குடிநீர் இணைப்பு வேண்டி முறையாக மனு செய்தனர். அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு மாநகராட்சி மூலம் குடிநீர் இணைப்பு வழங்கி குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

மாப்பிள்ளையூரணி சர்வே எண்.183/3 மாப்பிள்ளையூரணி ஊராட்சியை சார்ந்தது. மாநகராட்சி எல்லையையொட்டி நில அளவை செய்யப்படாத பகுதியிலுள்ள குடியிருப்புகளை ஆக்கிரமிப்பாக கருதி அப்புறப்படுத்த இயலாது. மேலும், தற்போது மேற்படி பகுதிவாழ் மக்களால் புதிய கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி ஏதும் செய்யப்படவில்லை. மேலும் அங்கு புதிய குடியிருப்புகளும் ஏற்படவில்லை என்ற விவரத்தை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7)தூத்துக்குடி மாநகராட்சி தனது 06.07.2023 நாளிட்ட அறிக்கையில் " மனுதாரர் புகார் மனு இணைப்பு–2ல் தெரிவிக்கப்பட்டுள்ள பங்களா தெரு கட்டிடம் சாலை மற்றும் மாநகராட்சி இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்படவில்லை என்றும், மேலும் குடியிருப்பு கட்டிடத்தின் படிக்கட்டு மட்டும் தென்வடல் சாலையில் கிழக்கு பக்கம் 1.5மீ x 1.2 மீ. அளவில் கட்டப்பட்டுள்ளது என்றும் மேற்படி இடத்தில் ஏற்கனவே 2021ல் கட்டி முடிக்கப்பட்டுள்ள தரை தளம் (ம) முதல் தளம் கட்டுமானத்திற்கு தூத்துக்குடி மாநகராட்சி 2008ம் வருடத்திய சட்டப்பிரிவு 296(1) (2) (ம) (3)யின் கீழ் அனுமதியில்லா கட்டிடத்திற்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவு 56, 57 (ம) 89(a), 85 ன் கீழ் மேற்படி அனுமதியற்ற கட்டுமானத்தினை மூடி முத்திரையிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரம் அறிக்கையாக சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

8) இந்நேர்வில் மனுதாரரின் மனு, அவரது சார்பாக ஆஜரானவர் அளித்த வாக்குமூலம், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, நிர்வாக அலுவலரின் வாக்குமூலம், ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

2014ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் குறிப்பாக:–

பிரிவு 7. The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) Xx
(b) Xx
(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any Officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

பிரிவு 12 (1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences in the following manner, namely:-

(a) xxxx
(b) xxxx

( c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local bodyன்படி பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

கடலோர ஒழுங்குமுறை மண்டலம் கடலோர சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், கடலோரப்பகுதிக்கு அருகிலுள்ள மனித மற்றும் தொழில் துறை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மனுதாரர் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள சர்வே எண்.183/3 மாப்பிள்ளையூரணி ஊராட்சியைச் சார்ந்தது. எனவே இது தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மனுதாரர் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள பங்களா தெரு கதவு எண்.10/3 தொடர்பாக மாநகராட்சி 28.07.2021 மற்றும் 06.08.2021 அன்று அறிவிப்பு ஒன்றினை வழங்கியுள்ளது. அதன் தொடர்ச்சியாக 23.06.2023, மற்றும் 06.07.2023 அன்றுதான் அறிவிப்புகள் சார்பு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அனுப்பிய பிறகே தூத்துக்குடி மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. மனுதாரர் மாநகராட்சி நிர்வாகத்திற்கு புகார் அளித்தும் அது உரிய முறையில் நடவடிக்கையை எடுக்கவில்லை

என்பதும் மாநகராட்சி அலுவலர்கள் விதிகளை செயல்படுத்தும் அலுவலர்களாக செயல்படாமல் விதிமீறி அனுமதியின்றி கட்டடம் கட்டுபவருக்கு துணைபோய் இருப்பதும் புலனாகிறது. எனவே இந்நிகழ்வில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் கடற்கரையின் இயற்கை சூழல் மாறாவண்ணம் விதிகளுக்கு உட்பட்டு சுற்றுச்சூழலை பாதுகாக்க கடலோர ஒழுங்குமுறை மண்டல விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ள தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுரை வழங்குகிறது.

2023–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.M.கணேசன்,
   1/63–A, அன்னை இல்லம்,
   மேற்கு தெரு,
   இருக்கன்குடி – 626 202.
2. ஆணையர்,
   தூத்துக்குடி மாநகராட்சி,
   தூத்துக்குடி.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.
4. இணைஇயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.
5. மாவட்ட ஆட்சியர்,
   தூத்துக்குடி மாவட்டம்,
   தூத்துக்குடி. (With reference to S.No.183-3 of
   மாப்பிள்ளையூரணி ஊராட்சி)

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவி பதிவாளர்